- சர்ச்சையைத் தீர்ப்பதற்கு புகார் / விண்ணப்பம் செய்தவருக்கு உங்களிடமிருந்து என்ன தேவைப்படுகிறது மற்றும் அது ஏன் அவருக்கு முக்கியமானதாக இருக்கக்கூடும்?
- சர்ச்சையைத் தீர்ப்பதற்கு புகார் / விண்ணப்பம் செய்தவரிடமிருந்து உங்களுக்கு என்ன தேவைப்படுகிறது மற்றும் இது ஏன் உங்களுக்கு முக்கியமானதாக உள்ளது?
- உங்களுக்கும் புகார் / விண்ணப்பம் செய்தவருக்கும் சர்ச்சையைத் தீர்த்துவைக்கக்கூடிய, எம்மாதிரியான பாரபட்சமற்ற மற்றும் நியாயமான தீர்வுகளை உங்களால் யோசிக்க முடியும்?
- நேரம், செலவுகள், சௌகரியம், மன நிம்மதி, உறவுகள் மற்றும் வேறேதேனும் நீண்ட நாள் பரிசீலனைகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு எது உங்களுக்கு கூடுதல் நன்மை தரும், சர்ச்சையைக் குறித்து விசாரணைக்குச் செல்வதா, அல்லது மத்தியஸ்த கூட்டத்தில் அதைத் தீர்த்துகொள்வதா?

**மத்தியஸ்தத்திற்கு நான் என்ன கொண்டு வர வேண்டும்?**

சர்ச்சைக்குத் தொடர்புடைய ஏதேனும் ஆவணங்கள், புகைப்படங்கள், பதிவுகள் போன்றவற்றை நீங்கள் உடன் எடுத்துவரவேண்டும்.

**மத்தியஸ்தத்திற்கு நான் வரவில்லை என்றால் என்ன நடக்கும்?**

வழக்கு நடைமுறையின் ஓர் அம்சமாக பணியிலுள்ள மாஜிஸ்திரேட் / நீதிபதி, நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் மத்தியஸ்தத்திற்குச் செல்ல வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். தகுந்த காரணமில்லாமல் நீங்கள் மத்தியஸ்தத்திற்கு வரவில்லையென்றால், ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் நீதிமன்றம் சாராத தீர்வை எட்ட புகார் / விண்ணப்பம் செய்தவரோடு ஒரு தனிமுறையான, அந்தரங்கமான சூழலில் பேச்சு வார்த்தைகள் நடத்தும் வாய்ப்பை இழப்பதோடு, புகார் / விண்ணப்பம் செய்தவர் உங்களுக்கு எதிரான வழக்கையும் தொடரலாம். அவ்வாறு இருப்பின், நீங்கள் ஒரு நீதிமன்ற வழக்கை எதிர்கொள்ளலாம்.
அதனால், நீங்கள் மத்தியஸ்தத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று வலுவாக ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

**புகார் / விண்ணப்பம் செய்தவர் மத்தியஸ்தத்திற்கு வரவில்லை என்றால் என்ன நடக்கும்?**

புகார் / விண்ணப்பம் செய்தவர் மத்தியஸ்தத்திற்கு வரவில்லை என்றால் மத்தியஸ்தர் மற்றொரு மத்தியஸ்த கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யலாம் அல்லது மேல் நடவடிக்கைக்காக உரிய பதிவகத்திற்கு வழக்கை அனுப்பி வைக்கலாம்.

**மத்தியஸ்தம் எவ்வளவு நேரம் நீடிக்கும்?**

தரப்பினர்கள் எவ்வளவு விரைவாக ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் ஓர் உடன்பாட்டுக்கு வருகிறார்கள் என்பதைப் அது பொறுத்திருக்கும்.
மத்தியஸ்த கூட்டங்கள், ஒரு காலை முழுவதும் அல்லது ஒரு மதியம் முழுவதும் இடம்பெறும். அவை சுமார் 3 மணி நேரம் நீடிக்கும். பல வழக்குகளில், தரப்பினர்களால் அந்நேரத்திற்குள் சர்ச்சையைத் தீர்த்துகொள்ள முடியும். சில வழக்குகளில், நீங்கள் மேலும் ஒரு கூட்டத்திற்கு வர வேண்டிய அவசியமிருக்கும்.

**நான் ஒரு குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரை அழைத்து வரலாமா?**

SCCDR-க்கு நீங்கள் ஒரு குடும்ப உறுப்பினரை அல்லது நண்பரை அழைத்து வரலாம். ஆனால், உங்களின் குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர் மத்தியஸ்த அறைக்குள் நுழைய மத்தியஸ்தரின் அனுமதி வேண்டும்.

**மத்தியஸ்தத்திற்கு நான் ஏதேனும் கட்டணங்கள் செலுத்த வேண்டுமா?**

இல்லை. SCCDR-ல் உங்களின் வழக்கு இலவசமாக மத்தியஸ்தம் செய்யப்படும்.

**நான் ஒரு வழக்கறிஞரை நியமிக்க வேண்டுமா?**

சுயமாக மத்தியஸ்த கூட்டத்திற்கு வருவதில் உங்களுக்கு எந்தவொரு தயக்கமும் இல்லையென்றால் நீங்கள் ஒரு வழக்கறிஞரை நியமிக்க அவசியமில்லை. ஆனால், நீங்கள் முன்னரே ஒரு வழக்கறிஞரை நியமித்திருந்தால், உங்களின் வழக்கறிஞர் மத்தியஸ்த கூட்டத்திற்கு உங்களுடன் வரலாம்.

---

*பொறுப்பு அறிவிக்கை : இந்த சிறு வெளியீடு பொது தகவலுக்கு மட்டும் தயாரிக்கப்படுகிறது. இது சட்ட ஆலோசனைக்கு மாற்றானதல்ல. உங்களின் வழக்கிற்குச் சட்ட ஆலோசனை தேவைப்பட்டால் நீங்கள் ஒரு வழக்கறிஞரின் ஆலோசனையைப் பெற வேண்டும். இந்த வெளியீட்டின் பொருளடக்கத்திலிருந்து மற்றும் அதன் தொடர்பாக எழும் ஏதேனும் மற்றும் எல்லா பொறுப்புகளிலிருந்தும் அரசு நீதிமன்றங்கள் மறுப்புரிமை பெற்றுள்ளன.*

---

STATE COURTS SINGAPORE

1 ஹெவ்லாக் சதுக்கம்
சிங்கப்பூர் 059724
Tel: 1800-JUSTICE (1800-5878423)
www.statecourts.gov.sg

# எதிர் தரப்பிற்கான மத்தியஸ்தம்

*மத்தியஸ்தத்திற்காக அரசு நீதிமன்றங்களின் சர்ச்சை தீர்வு நிலையத்திற்கு (SCCDR) வரும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளீர்கள். வழக்கை விசாரணைக்கு எடுத்து செல்லாமல் ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் தீர்வை நீங்களும் எதிர் தரப்பும் எட்டுவதற்கு உங்களுக்கு உதவுவதே மத்தியஸ்தத்தின் குறிக்கோளாகும். மத்தியஸ்தம் எவ்வாறு செயல்படும் என்று இந்த சிறு வெளியீடு விளக்குகிறது.*

---

**மத்தியஸ்தம் என்றால் என்ன?**

**அது சர்ச்சைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழி**

மத்தியஸ்தர் நடுநிலையான மூன்றாம் தரப்பு ஆவார். அவர், ஒப்பந்த நோக்குடன் நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் கலந்துரையாடி நீதிமன்றத்துக்குச் செல்லாமல் உங்களின் வழக்கைச் சுமூகமான தீர்த்துக்கொள்ள உதவுவார். மத்தியஸ்தர், சர்ச்சையில் யார் பக்கமும் பேசமாட்டார், பாரபட்சமாகவும் நடந்துகொள்ளமாட்டார். அவர் உங்களுக்கோ புகார் / விண்ணப்பம் செய்தவருக்கோ சட்டம் சார்ந்த அல்லது மற்ற ஆலோசனை ஏதும் வழங்கவும் மாட்டார்.

**அது மத்தியஸ்தரால் வழிநடத்தப்படும் ஒரு கூட்டம்**

நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் சம்மதம் தெரிவிக்கும் ஒரு சமரச தீர்வை எட்டுவதற்கு மத்தியஸ்தர் உதவுவார். புகார் / விண்ணப்பம் செய்தவர் நீங்கள் சொல்வதைக் கேட்டு உங்களின் அக்கறைகளைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்று நீங்கள் எவ்வாறு விரும்புவீர்களோ, அதுபோலவே புகார் / விண்ணப்பம் செய்தவர் கூறுவதை நீங்களும் கேட்க தயாராக இருக்க வேண்டும், அவரது அக்கறைகளை நீங்கள் எவ்வாறு கருத்தில்கொள்ளலாம் என்றும் பரிசீலிக்க வேண்டும்.

**அது ஒரு விசாரணை அல்ல**

சர்ச்சையில் யார் சரி, யார் தவறு என்று மத்தியஸ்தர் மதிப்பிடவோ முடிவு செய்யவோ மாட்டார்.

## அது அந்தரங்கமானது மற்றும் உரிமைக்குப் பாதகமற்றது

“அந்தரங்கம்” என்றால் நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் கலந்து பேசும் அனைத்தும் வேறு யாரிடமும் வெளியிடப்படாது மற்றும் வெளியிடப்படக்கூடாது.

“உரிமைக்குப் பாதகமற்றது” என்றால் சர்ச்சை மத்தியஸ்தம் மூலம் தீர்க்கப்பட முடியவில்லை என்றால், மத்தியஸ்தத்தின் போது தரப்பினர் பகிர்ந்துகொண்டவை வெளியிடப்படவோ அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படவோ முடியாது.

**மத்தியஸ்தத்தின் குறிக்கோள் என்ன?**

நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் சர்ச்சையைத் தீர்த்துகொள்ள ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் தீர்வைக் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவுவதே மத்தியஸ்தத்தின் குறிக்கோளாகும்.

**மத்தியஸ்தர் என்னையும் புகார் / விண்ணப்பம் செய்தவரையும் சர்ச்சையைத் தீர்த்துக் கொள்ள கட்டாயப்படுத்துவாரா?**

இல்லை. சமரசமாக வேண்டும் என்று மத்தியஸ்தர் தரப்பினர்களைக் கட்டாயப்படுத்த மாட்டார். நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் ஓர் உடன்பாட்டைக் கண்டறிய மத்தியஸ்தர் உங்களுக்கு உதவுவார். சர்ச்சையைத் தீர்த்துக் கொள்வதும் மற்றும் தீர்வுக்கான நிபந்தனைகளும் முற்றிலும் நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் எடுக்க வேண்டிய முடிவு.

**மத்தியஸ்தர் யார்?**

SCCDR-ரில் உள்ள மத்தியஸ்தர்கள், நீதித்துறை அதிகாரிகள் தன்னார்வ மத்தியஸ்தர்கள் மற்றும் சமாதான நீதிபதி (ஜஸ்டிஸ் ஆப் பீஸ்) ஆவர்.

**நான் ஏன் மத்தியஸ்த கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்?**

விசாரணைக்குச் செல்வதைவிட மத்தியஸ்தத்தில் பல **அனுகூலங்கள்** உள்ளன.

**குறைந்த செலவு** | **கூடுதல் மன நிம்மதி**
**விரைவான தீர்வு** | **குறைந்த மனவுளைச்சல்**

**முடிவின் விளைவில் தரப்புகளுக்குக் கூடுதல் கட்டுப்பாட்டு ஆற்றல் உள்ளது**

**கூடுதல் நீக்குப்போக்கானது மற்றும் விதிமுறைசாராதது**

**அந்தரங்கமானது மற்றும் உரிமைக்குப் பாதகமற்ற கலந்துரையாடல்களும் தீர்வுகளும் கொண்டது.**

**மத்தியஸ்த கூட்டத்தின் போது என்ன நடக்கும்?**

**அறிமுகம் மற்றும் இணை கூட்டம்**

மத்தியஸ்தர் உங்களையும் புகார் / விண்ணப்பம் செய்தவரையும் சந்தித்து மத்தியஸ்த நடைமுறைகளை விளக்குவார்.
நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் சர்ச்சையைப்பற்றிப் பேச வாய்ப்பு கிடைக்கும். நீங்களும் எதிர் தரப்பும் அக்கறை கொண்டுள்ள பிரச்சனைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான சாத்தியமான வழிகளை நாட மத்தியஸ்தர் உதவுவார்.

↓

**தனிப்பட்ட கூட்டங்கள்**

தேவை ஏற்பட்டால், மத்தியஸ்தர் ஒவ்வொரு தரப்புடனும் தனித்தனியாக பேசுவார்.
புகார் / விண்ணப்பம் செய்தவருடன் பகிர்ந்துகொள்ள உங்களுக்குத் தயக்கமாக இருப்பவை உள்பட, உங்களுக்குள்ள மற்ற விவகாரங்கள் மற்றும் அக்கறைகளை மத்தியஸ்தரிடம் எடுத்து சொல்ல இதுவே சிறந்த சமயம்.
ஒருவருக்கொருவர் இசைந்து ஏற்கும் சாத்தியமான தீர்வுகளைத் தொடர்ந்து ஆராயவும் இது சிறந்த சமயமும் ஆகும். நீங்கள் அனுமதி அளித்தாலெயன்றி, நீங்கள் கூறிய எதையும் புகார் / விண்ணப்பம் செய்தவரிடம் மத்தியஸ்தர் கூறமாட்டார்.

↓

**கூடுதலான இணை மற்றும் தனிப்பட்ட கூட்டங்கள்**

பயனளிக்கும் என்று மத்தியஸ்தர் எண்ணினால், தரப்புகள் கூடுதலான இணை மற்றும் தனிப்பட்ட கூட்டங்களைப் பெறலாம்.

↓

**கூட்டத்தின் நிறைவு**

நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் ஒரு தீர்வை எட்டிவிட்டால், உங்களின் உடன்பாட்டைச் சரி பார்க்கவும், உறுதி செய்யவும் நீங்கள் இருவரும் சேர்ந்தே மத்தியஸ்தரைச் சந்திப்பீர்கள். மத்தியஸ்தர் உடன்பாட்டின் நிபந்தனைகளைப் பதிவு செய்வார், வழக்கும் நிறைவடையும். அதன் பிறகு, நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் உடன்பாட்டின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்.
நீங்களும் எதிர் தரப்பும் ஒரு தீர்வை எட்ட வில்லை என்றால், மத்தியஸ்தர் கீழ்வருபவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்யலாம்:

1. மற்றுமொரு மத்தியஸ்த கூட்டத்தொடருக்கு ஏற்பாடு செய்யலாம்; அல்லது
2. வழக்கிற்கான அடுத்தக்கட்ட நடவடிக்கையை எடுக்க வழக்கை உரிய பதிவகத்திற்குத் திருப்பி அனுப்பலாம்.

**மத்தியஸ்தத்திற்கு வருவதால் நான் புகார் / விண்ணப்பம் செய்தவரின் வழக்கிற்கு சம்மதம் தெரிவிக்கின்றேன் என்று பொருள்படுமா? என் மீது குற்றவியல் பதிவு ஏதேனும் உண்டாகுமா?**

நீங்கள் மத்தியஸ்தத்திற்கு வருவதால், புகார் / விண்ணப்பம் செய்தவரின் புகாருக்கு அல்லது உங்களுக்கு எதிரான வழக்கிற்கு நீங்கள் சம்மதம் தெரிவிக்கின்றீர்கள் என்று பொருள்படாது. நீங்கள் மத்தியஸ்தத்திற்கு வந்தீர்கள் என்ற காரணத்திற்காக அல்லது மத்தியஸ்தத்தின் போது உடன்பாடை எட்டினீர்கள் என்ற காரணத்திற்காக உங்கள் மீது குற்றவியல் பதிவு ஒன்று உண்டாகாது.

அதற்கு பதிலாக, மத்தியஸ்தம் உங்களுக்குக் கீழ்க்கண்ட வாய்ப்புகளை வழங்குகிறது

- புகார் / விண்ணப்பம் செய்தவர் உங்களுக்கு எதிராக புகார் அல்லது வழக்கைக் கொண்டுவருவதற்காக காரணங்களை நீங்கள் கேட்கலாம்
- சர்ச்சையைப்பற்றிய உங்களின் கருத்துகளைப் புகார் / விண்ணப்பம் செய்தவர் கேட்டு ஏதேனும் கருத்து வேறுபாடுகளைத் தெளிவுப்படுத்திக்கொள்ளலாம்; மற்றும்
- சர்ச்சையைப்பற்றி புகார் / விண்ணப்பம் செய்தவருடன் கலந்து பேசி இருவரும் ஒரு தீர்வை காணலாம்.

**புகார் / விண்ணப்பம் செய்தவரின் மீது எனக்கு ஏதேனும் புகார்கள் அல்லது விவகாரங்கள் இருந்தால்?**

புகார் / விண்ணப்பம் செய்தவரின் மீது உங்களுக்கு ஏதேனும் புகார்கள் அல்லது விவகாரங்கள் இருந்தால், நீங்கள் இவற்றை மத்தியஸ்தத்தின் போது முன் வைக்கலாம். அதன் பிறகு, நீங்களும் புகார் / விண்ணப்பம் செய்தவரும் உங்களுக்குள்ள ஏதேனும் வேறுபாடுகளை ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் ஓர் உடன்பாட்டின் மூலம் தீர்த்துகொள்ள முயற்சிக்கலாம்.

**மத்தியஸ்தத்திற்கு நான் எவ்வாறு தயார் செய்வது?**

மத்தியஸ்தம் வெற்றிகரமாக அமைய இரு தரப்பினர்களும்:

- நல்ல நோக்கத்துடன் வரவேண்டும்;
- ஒருவர் மற்றொருவர் கூறுவதை கேட்க தயாராக இருக்க வேண்டும், ஒருவர் மற்றொருவரின் நலன்களையும் அக்கறைகளையும் எண்ணிப்பார்த்து ஒருவர் மீது ஒருவர் நியாயமாக நடந்துகொண்டு; மற்றும்
- ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் தீர்வைக் கண்டுபிடிக்க இணைந்து செயல்பட தயாராக இருக்க வேண்டும்

மத்தியஸ்தம் நல்ல பயன் அளிக்கக்கூடியதாக அமைய, நீங்கள் சர்ச்சையைத் தீர்ப்பதில் குறிப்பாக இருப்பதுடன் ஒருவருக்கொருவர் மனதார ஏற்கும் தீர்வுகளை எட்ட திறந்த மனதுடன் வரவேண்டும்.

மத்தியஸ்தர் உங்களின் வழக்கை முடிவு செய்ய மாட்டார். அதனால், நீங்கள் சரி என்றும் மற்ற தரப்பு தவறென்றும் அவரை நீங்கள் நம்பச்செய்ய முயற்சிக்க அவசியமில்லை.

மத்தியஸ்தத்திற்கு வருவதற்கு முன் நீங்கள் பின்வரும் கேள்விகளைப்பற்றி யோசித்து வைத்துக்கொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும்.